**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.86/2021**

**Date:** 22.09.2025.

வா.சா.2 - திரு. ஜெயக்குமார்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் எனது முதல் விசாரணையில் நான் என்ன தொழில் செய்கிறேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், பிளம்பிங் மற்றும் wiring வேலை செய்கிறேன். எனது ஊர் நடுவூர்க்கரை. வாதி மற்றும் பிரதிவாதிகளின் சொந்த ஊர் நடுவூர்க்கரை என்றால், சரிதான். வாதி ரவி என்ற ரவீந்தரனை எனக்கு 40 வருடங்களாகத் தெரியும். 3 ம் பிரதிவாதி இளங்கோவனை 10 வருடங்களாகத் தெரியும். வாதி எனக்கு நெருங்கிய நண்பர் என்றால், சரிதான். வாதிக்கும் எனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் உண்டு என்றால், சரிதான். வாதி கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் தான் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். 15.04.2019 ம் தேதி சுமார் காலை 10 மணி அளவில் வாதியின் வீட்டிற்கு போனேன். அன்றைக்கு, வாதிக்கு நான் ரூ.2,00,000/– கடன் கொடுத்தேன். அதற்கு வாதி என் பெயரில் காசோலை கொடுக்கவில்லை, கடன் உறுதி சீட்டும் கொடுக்கவில்லை. 3 ம் பிரதிவாதி இளங்கோ இறந்து போன றோஸ்லெட்டின் மகன் என்றால், சரிதான். றோஸ்லெட்டை இளங்கோ, அன்று காலை சுமார் 10.15 மணியளவில் வாதியின் வீட்டிற்கு கூட்டிக் கொண்டு வந்தார். எவ்வாறு றோஸ்வெட்டை அவர் அழைத்து வந்தார் என்று எனக்குத் தெரியாது. றோஸ்லெட்டும், இளங்கோவும் வாதியின் வீட்டிற்கு வந்தபோது அங்கு நானும், ரவீந்தரனும் இருந்தோம். வீட்டிற்குள் அவருடைய குடும்பத்தார் இருந்தார்கள். றோஸ்லெட் எழுதிக் கொடுத்ததாக நான் சொல்லும், ஆவணத்தில் முதல்

பக்கத்தில் நான் கையொப்பம் செய்தேன். ரவீந்தரனுக்காக நானும், றோஸ்லெட்டுக்காக இளங்கோவும் சாட்சி கையொப்பம் செய்தோம். றோஸ்லெட்டுடன், இளங்கோவைத் தவிர வேறு யாரும் உடன் வரவில்லை. றோஸ்லெட் வாதியிடம் கடன் வாங்கிய போது இளங்கோ உடன் இருந்தார் என்று தான் குறிப்பிடுகிறேன் என்றால், சரிதான். எனது Cell Phone No. 9443606285. 17.08.2021 அன்று நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கு சம்பந்தமாக அழைப்பாணை மற்றும் வழக்கு ஆவணங்களின் நகல் பெற்றுக் கொண்ட உடன், இளங்கோ என்னை மேற்படி Cell number ல் தொடர்பு கொண்டார் என்றால், அது விபரம் எனக்கு நினைவில் இல்லை. இளங்கோ மேற்படி promissory note ல் எந்த தேதியில் சாட்சி கையொப்பம் போட்டீர்கள் என்று கேட்ட போது, 5,6 நாட்களுக்கு முன்பாக போட்டதாக சொன்னேன் என்றால், அது விபரம் எனக்கு நினைவில் இல்லை. நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்வது குற்றம் என்று எனக்கு நன்கு தெரியும். இளங்கோ அபுதாபியில் வேலை பார்த்த விபரம் எனக்குத் தெரியாது. இளங்கோ 29.12.2018 ல் அபுதாபிக்கு சென்று விட்டு 14.06.2019 ல் தான் இந்தியா திரும்பினார் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. 15.04.2019 ல் இளங்கோ இந்தியாவிலேயே இல்லை என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. 15.04.2019 அன்று இளங்கோ றோஸ்லெட்டை வாதியின் வீட்டிற்கு அழைத்து வந்ததாக நான் குறிப்பிடுவது முற்றிலும் தவறானது என்றால், சரியல்ல. நானும் வாதியும் சேர்ந்து பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் செயல்படுகிறோம் என்றால், சரியல்ல. நான் குறிப்பிடுவது போல றோஸ்லெட் வாதியிடம் கடன் எதுவும் வாங்கவில்லை

என்றாலும், 15.04.2019 அன்று இளங்கோ றோஸ்லெட்டை வாதியின் வீட்டிற்கு அழைத்துக் கொண்டே வரவில்லை என்றாலும், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.